DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.262/19

Deposition of Witness: PW 4

| | |
|---|---|
| Name பவித்ரா | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் வேலைக்கு செல்வதில்லை. அசா1 என் கணவரின் அண்ணன். அசா2 என் தம்பி. அசா3 என் அம்மா. கடந்த 7.4.2019 ம் தேதி எனக்கு வளைகாப்பு போடுவதற்காக போடிக்கு வேனில் சுமார் 16 பேருடன் என் பெற்றோரும் வந்தார்கள். வளைகாப்பு விழா சுமார் 1.30 மணிக்கு முடித்துவுடன் போடியிலிருந்து கிளம்பி தீர்த்ததொட்டி கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிசென்றோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தேனியிலிருந்து தேவாரம் செல்லும் PPP என்ற தனியார் பேருந்து அதிகவேகமாகவும், கட்டுப்பாடலில்லாமலும், அஜாக்கிரதையாகவும் வந்தும் எங்கள் வேனின் மீது மோதியது. அதில் என்னுடன் வந்த என் அப்பா வெற்றியரசன், சிற்றரசன், பேச்சியம்மாள், சரஸ்வதி ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். என் அம்மாவிற்கு தொடையிலும் உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டது. என் தம்பி அசா2 க்கு இடது கையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. பின்னந்தலையிலும் காயமானது. என் சித்தி மகள் ரீட்டா என்பவருக்கு காயமாகி க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் போது இறந்துவிட்டார். அந்த வேனில் சென்ற கலாவதிக்கு தலையில் காயமும், கருப்பாயிக்கு கை எலும்பு முறிவும், லதாவிற்கு கை எலும்பு முறிவும், ரித்திசாவிற்கு முதுகுதண்டிலும் காயமானது. கர்ப்பமாக இருந்த எனக்கு பித்தப்பை வெடித்து குழந்தையுடன் கர்ப்பையை எடுத்துவிட்டார்கள். சுபாவிற்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டு, கண்பார்வை போனதால் சிகிச்சை எடுத்துக்கொண்டார். ராஜேஷ்வரிக்கு குறுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்து பிளேட்வைக்கப்பட்டுள்ளது. பாக்கியத்திற்கு நெற்றியில் வெட்டுகாயமும், கை, கால்களில் காயமும் ஏற்பட்டது. காசியம்மாளுக்கு இரண்டு கால்களிலும் எலும்பு முறிவானது. கை எலும்பும் முறிந்தது. நான் வேனின் முதல் சீட்டில் அமர்ந்து வந்தேன் அப்போது சிவப்பு கலிரில் வந்த தனியார் பேருந்து வேகமாக தவறான பாதையில் வந்து எங்கள் வேன் மீது மோதியது. வேன் கவிழ்ந்து இரண்டு மூன்று முறை பிரன்டுவிட்டது. பின்னர் நான் மயக்கமாகிவிட்டேன். பேருந்தின் ஓட்டுனர் தான் மேற்படி விபத்திற்கு காரணம். சம்பவம் தொடர்பாக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். அவர்கள் இன்னறய தினம் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க நியாயமான காரணம் முன் வைக்கப்படாததால் வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறது. சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.